# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 10 | வணிகக்கல்வியும், கணக்கீடும் I, II | நேரம்: 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடம்

**கவனிக்க:**
- ❖ எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

## பகுதி-I

**பின்வரும் விடய ஆய்விலிருந்து வினா இலக்கம் 1 – 5 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.**

சரிகா சாரதி பயிற்சி நிலையம் ஒன்றினைத் தனக்கு சொந்தமான 10 மோட்டார் வாகனங்களைக் கொண்டு "கிருஸ்ணா லேணர்ஸ்" என்னும் பெயரில் நடாத்தி வருகின்றார்.

1) மேற்படி வணிகத்தினால் நிறைவேற்றப்படும் மனித தேவை யாது?
   (1) பாதுகாப்பு (2) கல்வி (3) தொடர்பாடல் (4) பொழுதுபோக்கு

2) குறித்த பயிற்சி நிலையத்தினை உற்பத்தித்தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்தும்போது ……………………….. எனக் கருதப்படும்.
   (1) பொருள் உற்பத்தி வணிகம்
   (2) தனியார்துறை வணிகம்
   (3) சேவை உற்பத்தி வணிகம்
   (4) பொது (அரச) துறை வணிகம்

3) சாரதி பயிற்சி நிலையத்திற்காக பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்கள் உள்ளடங்கும் உற்பத்திக் காரணியாக அமைவது,
   (1) மூலதனம் (2) நிலம் (3) உழைப்பு (4) முயற்சி

4) மேற்படி வணிகத்தின் பெயரினைப் பதிவு செய்யும் சட்டமாக அமைவது,
   (1) 1972 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டம்
   (2) 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க வணிகப்பெயர்பதிவு கட்டளைச் சட்டம்
   (3) 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச்சட்டம்
   (4) 1890 ஆம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டம்

5) மேற்படி வணிகத்தில் இனங்காணக்கூடிய அக்கறை செலுத்தும் தரப்பினர் ஒருவராகக் கருதப்படக் கூடியவர்
   (1) நிதி நிறுவனங்கள் (2) போட்டியாளர் (3) வழங்குநர் (4) உரிமையாளர்



kalvi.lk

6) பின்வரும் பண்புகளில் தேவைக்குரிய பண்புகளை மாத்திரம் கொண்டுள்ள தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) அத்தியாவசியமானவை, பல்வேறுபட்டவை, வரையறுக்கப்பட்டவை.
(2) பொதுவானவை, வரையறுக்கப்பட்டவை, அத்தியாவசியமானவை.
(3) பொதுவானவை, உருவாக்கக் கூடியவை, வரையறுக்கப்படாதவை.
(4) அத்தியாவசியமானவை, உருவாக்கக் கூடியவை, வரையறுக்கப்பட்டவை

7) யாதேனும் வணிகமொன்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்குச் சமமான பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துபவர்களைக் குறிப்பது,

(1) வழங்குநர் (2) போட்டியாளர் (3) நிதி நிறுவனங்கள் (4) ஊழியர்கள்

8) "அதிக உணவு பணவீக்கம் காரணமாக அதிகளவில் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள நாடுகள் தொடர்பில் உலகவங்கியின் தரப்படுத்தலில் இலங்கை ஏழாவது இடத்தில் இடம்பெற்றுள்ளது" மேற்கூறிய கூற்றில் இனங்காணப்படும் வணிகச்சூழலாக அமைவது,

(1) பொருளாதாரச் சூழல் (2) இயற்கைச் சூழல் (3) மக்கட்சூழல் (4) கலாசார சூழல்

9) பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) அரசாங்கம் வணிகத்தின் மீது சட்டதிட்டங்களை விதிப்பதன் மூலம் நுகர்வோர் பாதுகாக்கப்படுவர்.
(2) வட்டி வீதம் அதிகரித்ததால் வணிகர்கள் கடன் பெறுவதற்கு அதிகமாக விரும்புவர்.
(3). விலை மட்ட அதிகரிப்புக் காரணமாக நுகர்வோரின் கொள்வனவு சக்தி அதிகரிக்கும்..
(4) சம்பளம், வருமானம், சேமிப்பு, முதலீடு என்பன அரசியற்சூழல் காரணிகளாகும்.

10) புறச் சூழல் காரணிகளை மட்டும் கொண்ட விடைத் தொகுதியைத் தெரிவு செய்க

(1) வாடிக்கையாளர், ஊழியர், போட்டியாளர்.
(2) உரிமையாளர், ஊழியர், முகாமையாளர்.
(3) உரிமையாளர், ஊழியர், போட்டியாளர்.
(4) வாடிக்கையாளர், வழங்குனர், போட்டியாளர்.

11) தற்காலத்தில் கணினி மற்றும் தகவல் முறைமை பயன்படுத்தப்பட்டு கணக்கு வைத்தல் செயன்முறை மேற்கொள்ளப்படுவது எச் சூழற் காரணிக்குரியது?

(1) அரசியல் சூழல் (2) பொருளாதாரச் சூழல் (3) தொழில்நுட்பச் சூழல் (4) சட்டச் சூழல்

12) தனியாள் உரிமை வணிகமொன்றின் பண்பல்லாதது,

(1) மூலதனமானது உரிமையாளராகிய தனிநபரால் ஈடுபடுத்தப்படல்
(2) இலாபம் அல்லது நட்டத்தை உரிமையாளரே அனுபவித்தல்.
(3) உரிமையாளரின் வரையறுக்கப்படாத நட்டப்பொறுப்பு
(4) சட்ட ஆளுமை காணப்படல்

13) பங்கு வழங்கல் மூலம் பாரியளவு மூலதனத்தை திரட்டக் கூடிய வணிகம்.

(1) பங்குடமை வணிகமாகும். (2) கூட்டுறவு வணிகமாகும்.
(3) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாகும். (4) தனியுரிமை வணிகமாகும்..

14) இலங்கையில் தொடரூந்து சேவையை வழங்கும் அரச/பொதுத்துறை நிறுவன வகையாக அமைவது,

(1) அரச கம்பனி (2) அரச கூட்டுத்தாபனம்
(3) அரச திணைக்களம் (4) உள்ளூராட்சி நிறுவனங்கள்

15) குடிசன மதிப்பீட்டு திணைக்களத்தின்படி 25 க்குக் குறைந்த ஊழியர்களை உள்ளடக்கிய வணிகத்தைக் குறிப்பது

(1) தனியுடமை வியாபாரம் (2) சிற்றளவு வணிகம்
(3) பங்குடமை வியாபாரம் (4) சிறிய மற்றும் நடுத்தர வியாபாரம்

16) நாமகள் தனது பலசரக்கு வியாபாரத்தை ‘‘மலைமகள் பலசரக்கு வாணிபம்’’ என்னும் பெயரில் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றார். இவரது வணிகத்திற்கு பதிவுச் சான்றிதழை வழங்கும் நிறுவனமாக அமைவது,
(1) பிரதேச சபை (2) பிரதேச செயலகம்
(3) நுகர்வோர் அதிகாரசபை (4) கம்பனி பதிவாளர் நாயகம்

17) நடைமுறை அல்லா பொறுப்பாகக் கருதப்படக்கூடியது
(1) வங்கிக்கடன் (2) வங்கிக்கட்டணம் (3) வங்கிமேலதிகப்பற்று (4) வங்கி கடன் வட்டி

18) வணிகமொன்றுக்கு உரிமையாளரினால் வழங்கப்படும் வளங்களுக்கு மேலதிகமாக வெளி நபர்களினாலும் வளங்கள் வழங்கப்பட்டிருப்பின் அவ் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாடாக அமைவது,
(1) சொத்துக்கள் = உரிமை
(2) சொத்துக்கள் = உரிமை - பொறுப்புக்கள்
(3) உரிமை = சொத்து + பொறுப்புக்கள்
(4) சொத்து = உரிமை + பொறுப்புக்கள்

19) கணக்கீட்டுச் சமன்பாட்டில் சொத்தும், பொறுப்பும் குறைவடையக்கூடிய கொடுக்கல் வாங்கலாக அமைவது,
(1) ரூபா 15,000 பெறுமதியான பண்டங்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்படல்.
(2) ரூபா 35,000 வங்கிக்கடன் ஒன்று பெறப்படல்.
(3) உரிமையாளரின் தனிப்பட்ட தேவைக்காக ரூபா 5,000 வணிகத்திலிருந்து எடுத்தல்.
(4) கடன்கொடுத்தோருக்கு ரூபா 7,000 செலுத்துதல்.

20) வணிகமொன்றில் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூ 560 000 ஆகவும், மொத்த பொறுப்புக்களின் பெறுமதி ரூ.380 000 ஆகவும் காணப்படும்போது உரிமையின் மொத்தத் தொகையாக அமைவது,
(1) ரூ.180 000 (2) ரூ.160 000 (3) ரூ.940 000 (4) ரூ.190 000

21) பின்வருவனவற்றுள் வருமானக் கணக்காக மட்டும் கருதப்படக் கூடியது,
(1) மூலதனக் கணக்கு (2) வங்கிக் கடன் கணக்கு
(3) பெற்ற வட்டிக் கணக்கு (4) தொலைபேசி கட்டணக் கணக்கு

22) கொடுப்பனவுக் கைச்சாத்து என்னும் மூல ஆவணத்திற்கு பொருத்தமான மூலஏடு எது?
(1) சில்லறைக் காசேடு (2) கொள்வனவு நாட்குறிப்பு
(3) காசேடு (4) விற்பனை நாட்குறிப்பு

23) மூல ஏடாகவும், பேரேட்டுக் கணக்கொன்றாகவும் தொழிற்படும் ஏடு?
(1) பொது நாட்குறிப்பு (2) கொள்வனவு நாட்குறிப்பு (3) விற்பனை நாட்குறிப்பு (4) காசேடு

24) வணிகத்தின் தொலைபேசிக் கட்டணம் ரூபா 2,000 காசோலை மூலம் செலுத்தியதைப் பதிவு செய்வதற்குரிய மூல ஆவணம், மூல ஏடு என்பன முறையே,
(1) கொடுப்பனவுக் கைச்சாத்து, வங்கிக் கணக்கு
(2) கொடுப்பனவுக் கைச்சாத்து, காசுக் கணக்கு
(3) பற்றுச்சீட்டு, வங்கிக் கணக்கு
(4) பட்டியல், வங்கிக்கணக்கு

25) 01.01.2022 இல் மதுரா வணிகத்தின் காசுமீதி ரூ. 75 000 ஆகும். கீழே தரப்படும் கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்த பின் நிறுவனத்தின் காசுமீதியை சரியாகக் காட்டுவது,

- சம்பளம் செலுத்தியது ரூ. 35 000
- பொருட்களாகப் பற்றியது ரூ. 3 000
- முத்தரசனுக்கு பொருள் விற்பனை ரூ. 35 000
- வாடகை வருமானம் பெற்றது ரூ. 40 000

(1) ரூ. 80 000 (2) ரூ. 98 000 (3) ரூ. 90 000 (4) ரூ 95 000


kalvi.lk

26) பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
(1) வியாபாரக்கழிவு இரட்டைப்பதிவிற்கு உட்படும்.
(2) காசுக்கழிவு இரட்டைப்பதிவிற்கு உட்படும்.
(3) பெற்ற காசுக்கழிவு கடன்பட்டோருடன் தொடர்புபட்டது.
(4) கொடுத்த காசுக்கழிவு கடன்கொடுத்தோருடன் தொடர்புபட்டது.

கீழே தரப்பட்ட தகவல்களைக் கொண்டு வினா இலக்கம் 26 மற்றும் 27 இற்கு விடையளிக்குக. லலிதா வணிகத்தில் 2022.02.28 இல் சில்லறைக் காசு கட்டுநிதி மீதியாகவுள்ள பணம் ரூபா 800 ஆகும். 2022 பெப்ரவரி மாதம் இடம்பெற்ற சில்லறைக் காசு கொடுப்பனவுகள் வருமாறு,

போக்குவரத்துச் செலவு ரூபா 1,200
காகிதாதிகள் செலவு ரூபா 2,600
உபசரணைச் செலவு ரூபா 1,400
சூரியாவுக்குக் கொடுத்தது ரூபா 4,000

27) இவ் வணிகத்தில் 2022 பெப்ரவரி மாதத்திற்கான சில்லறைக் காசு வசக்கட்டு நிதியின் பெறுமதி யாது?
(1) ரூபா 9,200 (2) ரூபா 10,000 (3) ரூபா 11,400 (4) ரூபா 12,000

28) பெப்ரவரி மாதத்திற்கான பேரேட்டு நிரலின் மொத்தத் தொகை யாது?
(1) ரூபா 2,600 (2) ரூபா 3,800 (3) ரூபா 9, 200 (4) ரூபா 4,000

29) வங்கிக் கணக்கினைச் சீராக்கம் செய்வதற்கான கொடுக்கல் வாங்கலாக அமைவது,
(1) வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்படாத காசோலைகள்.
(2) வழங்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்.
(3) நிலையான கொடுப்பனவின் பெயரில் வங்கியினால் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கட்டணம்.
(4) கடன்கொடுத்தோனுக்கு கொடுத்த ரூபா 2,000 காசோலை வங்கியில் பணமாக்கப்படல்.

30) வங்கிக் கூற்றில் செலவு பக்கம் இடம்பெறும் உருப்படி எது?
(1) காசோலை புத்தகக் கட்டணம் (2) நிலையியற் கட்டளை காப்புறுதிக் கொடுப்பனவு
(3) வங்கிக் கட்டணம் (4) நேரடி வைப்பு

31) கார்த்திகேயன் எனும் கடன்பட்டோரிடம் இருந்து பெற்ற ரூ. 20 0000 காசோலையினை வங்கியில் வைப்பில் இட்டபோது வங்கியானது ''வரையுனரை நாடுக'' என்று குறிப்பிட்டு இக்காசோலையினை மறுத்தது. இந் நடவடிக்கையினை பதிவதற்கான சரியான இரட்டைப் பதிவு எது?
(1) வங்கிக்கணக்கு வரவு ரூ. 20 000, விற்பனை கணக்குச் செலவு ரூ. 20 000
(2) கடன்பட்டோர் கணக்கு வரவு ரூ. 20 000, வங்கிக் கணக்குச் செலவு ரூ. 20 000
(3) கடன்பட்டோர் கணக்கு வரவு ரூ. 20 000, விற்பனை கணக்குச் செலவு ரூ. 20 000
(4) மறுக்கப்பட்ட காசோலை கணக்கு வரவு ரூ. 20 000, விற்பனை கணக்குச் செலவு ரூ. 20 000

32) விற்பனை நாளேடானது,
(1) காசு விற்பனை பதியும் ஏடாகும்.
(2) சகல கடன்விற்பனைகளும் பதியும் ஏடாகும்.
(3) வியாபார பொருட்களின் கொள்வனவு பதியும் ஏடாகும்
(4) மீள் விற்பனைக்கான பொருட்களை கடனுக்கு விற்பனை செய்யும்போது பதியும் ஏடாகும்.

33) சாந்தி வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட மூல ஏடானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தது. திகதி, பட்டியல் இலக்கம், வழங்குநர், மொத்தப்பெறுமதி, பேரேட்டுப்பக்கம். இதற்கு பொருத்தமான மூலஏடு எது?
(1) கொள்வனவு நாளேடு (2) விற்பனை நாளேடு
(3) சில்லறைக் காசேடு (4) பொது நாட்குறிப்பேடு


kalvi.lk

34) வணிகமொன்றின் குறித்தகால இறுதியில் பேரேட்டுக் கணக்குகளின் வரவு, செலவு மீதிகளின் எண்கணித ரீதியான சரியான தன்மையை அறிவதற்காக தயாரிக்கப்படுவது,
(1) பரீட்சைமீதி (2) நிதிநிலைமைக் கூற்று
(3) தொங்கல் கணக்கு (4) வருமானக் கூற்று

35) பரீட்சைமீதியொன்றின் வரவுப் பக்கத்தில் காணப்படும் கணக்குகளின் தொகுதி.
(1) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர், மூலதனம்
(2) கடன்கொடுத்தோர், தேறியஇலாபம், பெற்றவாடகை
(3) அலுவலகத் தளபாடம், மின்சாரச் செலவு, காசுமீதி
(4) காசுமீதி, வங்கிமீதி, வங்கிக்கடன்

36) வணிகமொன்றின் பரீட்சைமீதியின் வரவுப் பக்கக் கூட்டுத்தொகை ரூ.420 000 ஆக இருப்பதுடன் செலவுப் பக்கக் கூட்டுத்தொகை ரூ. 440 000 ஆக காணப்பட்டது. இவ் வேறுபாட்டின் காரணமாக வணிகத்தின் தொங்கல் கணக்கில்
1. ரூ. 420 000 செலவு மீதியைக் காட்டும்
2. ரூ. 440 000 வரவு மீதியைக் காட்டும்
3. ரூ. 20 000 செலவு மீதியைக் காட்டும்
4. ரூ. 20 000 வரவு மீதியைக் காட்டும்

37) மரத்தளபாடங்களை விற்பனை செய்யும் நிறுவனமொன்று அலுவலகத்தேவைக்காக கணினி ஒன்றினை வரையறுத்த JKR கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்தது. மேற்படி கொடுக்கல் வாங்கலை பதிவு செய்வதற்கான முதற் பதிவேடு
(1) பொது நாட்குறிப்பேடு (2) கொள்வனவு நாட்குறிப்பேடு
(3) காசேடு (4) விற்பனை நாட்குறிப்பேடு

38) ''விளம்பல்'' எனும் விபரம் எழுதப்படுவது
(1) கொள்வனவு நாளேட்டிலாகும். (2) வங்கிக்கணக்கிலாகும்.
(3) விற்பனை நாளேட்டிலாகும். (4) பொது நாளேட்டிலாகும்.

39) சமப்படாத மீதியின் வித்தியாசத்தை சரி செய்யும் பொருட்டு வித்தியாசமான தொகை தற்காலிகமாக ஒரு கணக்கேட்டில் பதிவு செய்யப்படும். அக் கணக்கினைக் குறிப்பது,
(1) இலாபநட்ட கணக்கு (2) தொங்கல் கணக்கு (3) வியாபார கணக்கு (4) பரிட்சை மீதி

40) கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் பிரதிகூலமானது,
(1) இற்றைப்படுத்திய தரவுகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.
(2) கணக்கறிக்கைகள் சரியான தன்மை கொண்டதாகக் காணப்படும்.
(3) தொழில்னுட்ப கோளாறுகள் காரணமாக தரவுகள் அழிக்கப்படுதல்.
(4) கணக்கறிக்கைகளைத் தன்னியக்கமாகத் தயாரிக்கக்கூடியதாக இருத்தல்.


kalvi.lk

# பகுதி-II

❖ முதலாம் வினா உட்பட பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (1) தொடக்கம் (10) வரையான வினாக்களுக்கு விடை தருக.**

மோட்டார் வாகனங்களை திருத்தும் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்த ஜெயசீலன் என்பவர் நகரின் பிரதான சாலையில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றை வாடகைக்குப் பெற்று 01.01.2022 இல் ரூ 300 000 இனை மூலதனமாக இட்டு "ஜெயா மோட்டார் வண்டி திருத்தகம்" என்னும் பெயரில் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார். மேலதிகமான நிதித்தேவை கருதி 03.01.2022 இல் 12% வருட வட்டிக்கு ரூ. 100 000 வங்கிக்கடன் ஒன்றினையும் பெற்றிருந்தார்.

ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| 04.01.2022 | உபகரணங்கள் கொள்வனவு | | ரூ. 50 000 |
| 05.01.2022 | கட்டட வாடகை செலுத்தியது | | ரூ. 10 000 |
| 10.01.2022 | உதவியாளர் சம்பளம் | | ரூ. 15 000 |
| 15.01.2022 | டேவிட் கம்பனியிடம் உபகரணங்கள் கொள்வனவு | | ரூ. 25 000 |
| 20.01.2022 | மின்கட்டணம் செலுத்தியது | | ரூ. 3 000 |
| 22.01.2022 | தொலைபேசி கட்டணம் செலுத்தியது | | ரூ. 2 000 |
| 25.01.2022 | வருமானம் பெற்றுது | காசு | ரூ. 75 000 |
| | | கடன் | ரூ. 10 000 |
| 31.01.2022 | வங்கிக் கடன் செலுத்தியது | | ரூ. 1 000 |

❖ ஜெயசீலன் எதிர்காலத்தில் தன்னோடு மோட்டார் வண்டி திருத்தக பயிற்சிநெறியை பூர்த்தி செய்த இரண்டு நண்பர்களை இணைத்து வணிகத்தை விரிவுபடுத்த எண்ணினார்.

(1) (அ) உற்பத்தி தன்மை அடிப்படையில் ஜெயசீலனின் வணிகம் எத்தகைய வணிகமாகக் கருதப்படலாம்?
(ஆ) மேற்படி வணிகத்தில் காணப்படும் பலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
(2) (அ) மேற்படி வணிகத்தை உரிமை அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.
(ஆ) ஜெயசீலனின் வணிகம் பதிவு செய்யப்பட வேண்டுமா? காரணம் தருக.
(3) ஜெயசீலன் வணிகத்தில் காணப்படும் அனுகூலமான பண்புகள் இரண்டு தருக.
(4) செயசீலன் எதிர்காலத்தில் பல்திறன் கொண்ட மோட்டார் வண்டி திருத்துநர்களான நண்பர்களை இணைப்பதாயின் அவர் எத்தகைய வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு நீர் சிபார்சு செய்வீர்? காரணம் தருக.
(5) 03.01.2022 இல் ஜெயசீலன் வணிகத்தில் காணப்படும் கணக்கீட்டுச் சமன்பாட்டை தொகைகளுடன் தருக.
(6) மேற்படி வணிகத்தில் பயன்படுத்தப்படும் முதன்மையேடுகள் இரண்டு தருக.
(7) 15.01.2022 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப்பதிவினைத் தருக.
(8) காசுக் கணக்கினைத் தயாரித்து காசுமீதியினைக் கணிப்பிடுக.
(9) மேற்படி வணிகத்தில் காணப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களை பெறுமதியுடன் தருக.
(10) ஜெயசீலனின் உரிமையில் குறைவை ஏற்படுத்தி விடயங்களுக்கு இரண்டு உதாரணம் தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி -I வணிகக்கல்வி
**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.)**

02.

i. பின்வருவனவற்றை தேவைகள்,விருப்பங்கள் என வேறுபடுத்திக் காட்டுக.
உணவு, இடியப்பம், தோசை, உறையுள், உடை, கைத்தொலைபேசி, கல்வி, காப்பு (02 புள்ளிகள்)

ii. பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

A. விருப்பங்களை வணிகர்களால் தோற்றுவிக்க முடியும். (…….)
B. உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்டவைகளும் உற்பத்தியின்போது துணையாகக் கொள்ளப்படுபவைகளும் நிலம் என்னும் உற்பத்திக் காரணிக்குள் உள்ளடங்குகின்றது. (……)
C. உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கொள்கைகள், வரவு செலவுத்திட்டக் கொள்கைகள் என்பன பொருளாதாரச் சூழல் காரணிக்குள் உள்ளடங்கும். (…….)
D. இலாபம் அல்ல நட்டத்தை உரிமையாளரே அனுபவிக்கும் வணிகம் தனியுரிமை வணிகமாகும். (……)

(02 புள்ளிகள்)

iii. கீழே வணிகங்களின் பெயர்கள் சில தரப்படுகின்றன. அவற்றினை பொருள் உற்பத்தி நிறுவனமா? சேவை உற்பத்தி நிறுவனமா? எனக் குறிப்பிடுக.

A. சக்தி இனிப்பு உற்பத்தி நிறுவனம் - ……………………………………….

B. சுகம் ஆயுள்வேத வைத்தியசாலை - ……………………………………….

C. VK பழப்பாகு உற்பத்தி நிறுவனம் - ………………………………………..

D. பிள்ளையார் பல சரக்கு வியாபாரம் - ………………………………………. (02 புள்ளிகள்)

iv. வணிகச் சூழல், வணிக அமைப்புக்கள் தொடர்பாக சில விளக்கங்கள் கீழே தரப்படுகின்றன. அவ்விளக்கங்கள் குறிப்பிடும் முக்கிய சொற்பதங்களை இடைவெளியில் குறிப்பிடுக.

A. தனது அறிவு, திறன் என்பவற்றைப் பயன்படுத்தி ஒப்படைக்கப்பட்ட கருமங்களைச் சரியான முறையில் நிறைவேற்றுவோர் ……………………..……………………..

B. வணிகமொன்றை நடாத்திச் செல்லும்போது தேவையான மூலப்பொருட்கள், போக்குவரத்து வசதிகள் போன்ற பல்வேறு சேவைகளை வழங்கும் பிரிவினர் …………………………..

C. நாடொன்றின் தேசிய வருமானம் அந்நாட்டு மக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட முறையைக் குறிப்பது ………………………………………..

D. ஜனநாயக ரீதியிலான நிர்வாகத்தையும் சுயாதீனமான செயற்பாடுகளையும் கொண்டதாக தனிநபர்கள் சுயவிருப்பின்பேரில் ஒன்றிணைந்து சமஉரிமையை அனுபவிக்கும் பொதுத்தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு உருவாக்கும் அமைப்பு ………………… (02 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

03.

i. (அ) பொதுவாகக் காணப்படும் வணிக நோக்கங்கள் இரண்டு தருக.
(ஆ) பொருட்களின் பண்புகள் இரண்டு தருக.

ii. பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

A. தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துதல், தேசிய உற்பத்தியை அதிகரித்தல் வணிகம் ஒன்றின்மீது அரசு அக்கறை செலுத்துவதற்கான காரணங்களாக அமைகின்றது. (………)

B. வணிகமொன்றின் பொருத்தமற்ற புவியியல் அமைவிடம் அவ்வணிகத்திற்கு பலவீனமாகும். (……)

C. பங்குடைமை வணிகத்தின் பங்காளர்களின் நட்டப்பொறுப்பானது வரையறுக்கப்பட்டதாகும்.(…….)

D. அரசின் வருடாந்த வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் அரசதுறை நிறுவனம் கூட்டுத்தாபனமாகும். (………)

iii. பின்வரும் சட்ட வணிகங்களோடு தொடர்புபடும் வணிக அமைப்புக்களைக் குறிப்பிடுக.

A. மோசடி தவிர்ப்பு கட்டளைச் சட்டம் ……………………………………………

B. 1918 ஆம் ஆண்டு வணிகப் பெயர்ப் பதிவு கட்டளைச் சட்டம் ………………………….

C. 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் ………………………………..

D. 1972 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டம் …………………………(02 புள்ளிகள்)

iv. உங்களது பிரதேசத்தில் காணப்படும் பொருள் உற்பத்தி வணிமொன்றைத் தெரிவு செய்து அவ்வணிகத்திற்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு வளங்களை நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்னும் காரணிகளின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)



kalvi.lk

04.
i. வணிகம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

ii. உங்கள் பிரதேசத்தில் காணப்படும் வணிகவங்கியொன்றை உதாரணமாகக் கொண்டு அதில் அக்கறை செலுத்தும் தரப்பினர் நால்வரைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

iii. பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

A. இலங்கையில் மத்தியவங்கியின் ஆலோசனையின் பிரகாரமே பொருளாதாரக் கொள்கைகள் தீர்மானிக்கப்படுகின்றன. (…….)

B. உள்நாட்டு வணிகங்களின் நீடித்த, நிலைப்புத் தன்மையற்ற நிலை உருவாகுவதற்கு காரணமாக அமையும் சூழல் பூகோளமயச் சூழலாகும். (……)

C. வணிகச் செயற்பாடுகள் மூலம் உழைத்துக் கொள்ளும் மிகையினை அங்கத்துவர்களிடையே பகிரும் வணிக அமைப்பு பங்குடைமை ஆகும். (……)

D. வணிகர்கள் பெரும்பாலும் தொடக்கத்தில் ஆரம்பிப்பது பேரளவு வணிகங்களாகும். (……)

(02 புள்ளிகள்)

iv. வணிக நிறுவனங்களின் பெயர்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. வரையறுத்த துர்க்கா கம்பனி ………………………………………………………..

B. இலங்கை மின்சார சபை …………………………………………………………

C. ஆறுமுகம் ஸ்ரோர்ஸ் ……………………………………………………………..

D. ஆனந்தும் சகோதரர்களும் ………………………………………………………..

மேற்காட்டிய ஒவ்வொரு நிறுவனத்திற்குமுரிய வணிக அமைப்பு வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

## பகுதி II – கணக்கீடு

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.)**

5) i. அ) உரிமை என்றால் என்ன?

ஆ) வணிகமொன்றில் காணப்படும் பொறுப்புக்களின் வகைகளைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தருக. (2 புள்ளிகள்)

ii. குகன் களஞ்சியத்தின் 2021ம் ஆண்டிற்கான தகவல்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| 2021.01.01 இல் மூலதனம் | 300,000 |
| 2021ம் ஆண்டின் மொத்த வருமானங்கள் | 150,000 |
| 2021ம் ஆண்டின் மொத்த செலவீனங்கள் | 60,000 |
| 2021ல் இடப்பட்ட மேலதிக மூலதனம் | 50,000 |
| 2021ம் வருடகாலப்பகுதியில் பற்றுக்கள் | 10,000 |

31.12.2021ம் திகதியில் உரிமையாளரின் உரிமையாண்மையைக் காண்க. (2 புள்ளிகள்)

**iii. பின்வருவனவற்றைப் பொருத்தமான தலையங்கத்தின் கீழ் (✓) என அடையாளமிடுக.**

| உருப்படிகள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | வருமானம் | செலவினங்கள் |
|---|---|---|---|---|
| 1. காணிகட்டடம் | | | | |
| 2. காசு மீதி | | | | |
| 3. இயந்திரம் | | | | |
| 4. வாடகை கட்டணம் | | | | |
| 5. சம்பளம் | | | | |
| 6. பெற்ற வட்டி | | | | |
| 7. கடன் கொடுத்தோர் | | | | |
| 8. கொடுத்த வட்டி | | | | |

(4 புள்ளிகள்)



kalvi.lk

iv. மாதவி வணிகத்தில் ஜனவரி 2022இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

1. உரிமையாளரால் மூலதனம் இடப்பட்டது 100,000/-
2. 20,000/- பெறுமதியான பொருட்கள் மீது விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்டன.
3. 5,000/- பெறுமதியான பொருட்கள் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன.
4. வங்கிக் கடனாக 50,000/- பெறப்பட்டது.

மேற்படி கொடுக்கல் வாங்கல்களைப் பின்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் பதிந்து காட்டுக.

| | சொத்துக்கள் | | உரிமை + பொறுப்பு |
|---|---|---|---|
| 1. | | = | + - |
| 2. | | = | |
| 3. | | = | |
| 4. | | = | |

(4 புள்ளிகள்)
(மொத்தம் 12 புள்ளிகள்)

6) i) கணக்கு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii) தளபாடக் கொள்வனவு 15,000/- எனும் கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவினையும், இரட்டை விளைவுகளையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iii) யாதவி வணிகத்தின் 2021 ஜனவரி மாதம் நடைபெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன.

அ) தளபாடக் கொள்வனவு 50,000/-

ஆ) கடனுக்கு மீள் விற்பனைக்கான பொருள் கொள்வனவு 20,000/-

இ) கடன் விற்பனை 30,000/-

ஈ) சிறுசெலவுக் கொடுப்பனவு (போக்குவரத்து செலவு) 150/-

**வேண்டப்படுவது:-**
கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்தி மேற்படி கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கான மூல ஏடுகளையும் அதற்கான மூல ஆவணங்களையும் தருக.

| கொடுக்கல் | மூல ஏடு | மூல ஆவணங்கள் |
|---|---|---|
| அ. | ……………………….. | ……………………….. |
| ஆ | ……………………….. | ……………………….. |
| இ. | ……………………….. | ……………………….. |
| ஈ. | ……………………….. | ……………………….. |
| | | |

(4 புள்ளிகள்)

iv. உமா வணிகத்தின் 2021ம் ஆண்டிற்கான கணக்கேடுகளிலிருந்து பின்வரும் கணக்குகள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. (காசுக் கணக்கு தரப்படவில்லை)

இயந்திரக் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 02.01.2022 | காசு | | 200,000 | | | | |

வாடகைக் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 05.01.2022 | காசு | | 10,000 | | | | |

வங்கிக் கடன் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 08.01.2022 | காசு | | 10,000 | 01.01.2022 | மீதி/கீ/கொ/வ | | 50,000 |

பெற்றவட்டிக் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 12.01.2022 | காசு | | 5,000 |

மேற்படி நான்கு கணக்குகளிலும் பதிவுசெய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை திகதி ஒழுங்கில் எழுதிக் காட்டுக. (4 புள்ளிகள்) (மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

7). i. (அ) வங்கிக் கூற்று என்றால் என்ன?

(ஆ) வங்கிக்கணக்கு இறுதி மீதியும், வங்கிக் கூற்று இறுதி மீதியும் வேறுபடுவதற்கான காரணங்களில் வங்கிக் கணக்கில் திருத்தம் செய்யவேண்டிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii. 2022 யூன் மாதத்தில் வணிகமொன்றில் தயாரிக்கப்பட்ட விற்பனை நாட்குறிப்பேடு கீழே தரப்பட்டுள்ளது.

| திகதி | பட். இல | கொள்வனவாளர்கள் | தொகை | பேப. |
|---|---|---|---|---|
| 12.06.2022 | 155 | மல்லிகா | 17 300 | |
| 26.06.2022 | 175 | சுகந்தி | 14 000 | |

❖ மேற்படி நாட்குறிப்பேட்டினை பூரணப்படுத்தி பேரேட்டுக் கணக்கிற்கு மாற்றிக் காட்டுக. (02 புள்ளிகள்)

iii. (அ) கையடக்கத் தொலைபேசி பயன்பாடு காரணமாக வணிகச் செயற்பாடுகளுக்கு ஏற்படும் அனுகூலங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(ஆ) சண்முகம் வணிகத்தில் 2022.12.31 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் செலவுப்பக்கம் ரூ 1000 குறைவாகக் காணப்பட்டது. எனவே, குறித்த வணிகத்தின் கணக்காளரினால் கணக்கேடுகள் பரிசோதிக்கப்பட்டபோது பின்வரும் தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

- காப்புறுதிக்கட்டணம் செலுத்தியது ரூ 2000 கணக்குகளில் இருமுறை பதிவு செய்யப்பட்டது.
- 6500 க்கு கடனுக்கு விற்பனை, விற்பனை கணக்கில் ரூ.5 500 என பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது:-

❖ மேற்குறித்த வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு (02 புள்ளிகள்)

**iv. துவாரகன் களஞ்சியத்தின் 2021 மார்ச் மாதத்திற்கான சிறு செலவுகளின் விபரம் பின்வருமாறு.**

மாதாந்த வசக்கட்டு நிதி ரூ.3,000/-

| திகதி | கொடுக்கல் வாங்கல்கள் | பெறுமதி(ரூபா) |
|---|---|---|
| 01.03.2021 | சில்லறைக் காசு மீதி | 600 |
| 01.03.2021 | வசக்கட்டு மீள் நிரப்பல் | ? |
| 02.03.2021 | பஸ் கட்டணம் | 250 |
| 04.03.2021 | குளிர்பானம் | 275 |
| 06.03.2021 | முத்திரைச் செலவு | 260 |
| 08.03.2021 | போக்குவரத்துச் செலவு | 100 |
| 10.03.2021 | பதிவுத் தபால் | 280 |
| 17.03.2021 | சுத்திகரிப்பு செலவு | 120 |
| 28.03.2021 | சிற்றுண்டிகள் | 150 |

வேண்டப்படுவது.

போக்குவரத்துச் செலவு, அஞ்சல் செலவு , நானாவிதச் செலவு என்ற பகுப்பாய்வு நிரல்களைக் கொண்ட சில்லறைக் காசேட்டினைத் தயாரிக்குக. (4 புள்ளிகள்) (மொத்தம் 12 புள்ளிகள்)

ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை



**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**